அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 07/2020

எனது இலக்கம் : EST-06/04/LOANS/4072
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.03.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்களுக்கு

## புதிய கொரோனா வைரஸ் காரணமாக, எழுந்துள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு அரச உத்தியாகத்தர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் 11.2 மற்றும் 11.3 ஆம் பிரிவுகளின் வகைப்படுத்தலுக்கமைய பதவிநிலை உத்தியோகத்தர் வகுதிக்குற்பட்ட உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பொருட்டு வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளின் II ஆம் பாகத்தின் முற்பணக் கணக்குகளில், “அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணம்” என்ற தலைப்பின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடனுக்குப் பதிலாக இவ்வருடத்தின் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப்பணம் மற்றும் கடனுக்கான வட்டி அவ் உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடப்படலாகாது.

02. 2020 ஏப்ரல் மாதச் சம்பளம், ஏப்ரல் மாதம் 08 ஆந் திகதியன்று செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதுடன், அதற்கமைய இவ்வருடத்தின் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டிற்கான விழா முற்பணம் செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படமாட்டாது.

03. இச்சுற்றறிக்கை ஜனாதிபதி அலுவலகத்தின் அறிவுரைகளின் பேரிலும் மற்றும் பொதுத் திறைசேரியின் இணக்கப்பாட்டின் பேரிலும் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு